**2026 சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 12.4.2026 அன்று, மன்னார்குடி, நாகப்பட்டினம், நன்னிலம், பூம்புகார், குறிஞ்சிப்பாடி, நெய்வேலி, திட்டக்குடி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.**



- மன்னார்குடி, தந்தை பெரியார் சிலை பகுதியில், மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களை ஆதரித்து, பரப்புரை செய்தார்.





- திருத்துறைப்பூண்டி, கடைவீதி காமராஜர் சிலை பகுதியில், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் க.மாரிமுத்து அவர்களுக்கு, கதிர் அரிவாள் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.





- நாகப்பட்டினம், புத்தூர் சாலை அண்ணா சிலை பகுதியில், நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.ஹெச்.ஜவாஹிருல்லா, வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் மா.மீ.புகழேந்தி மற்றும் கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் டி.லதா தங்கமணி ஆகியோரை ஆதரித்து, பரப்புரை மேற்கொண்டார்.





- குடவாசல் ஓகைப்பகுதியில், நன்னிலம் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநிலத் தலைவர் வி.எம்.எஸ்.முகம்மது முபாரக் அவர்களை ஆதரித்து, பரப்புரை செய்தார்.



- குத்தாலம், மங்கைநல்லூர் பகுதியில், பூம்புகார் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் நிவேதா எம்.முருகன் அவர்களை ஆதரித்து, பரப்புரை மேற்கொண்டார்.







- வடலூர், வள்ளலார் பேருந்து நிலையம் பகுதியில், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களையும், புவனகிரி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் துரை கி.சரவணன் அவர்களையும் ஆதரித்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.



- நெய்வேலி, கும்பகோணம் சாலை இந்திரா நகர் பகுதியில், நெய்வேலி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் சபா.ராஜேந்திரன் அவர்களை ஆதரித்து, பரப்புரை மேற்கொண்டார்.







- திட்டக்குடி பேருந்து நிலையம் பகுதியில், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களை ஆதரித்து, பரப்புரை மேற்கொண்டார்.

